பழனி தேவஸ்தானத்திலுள்ள ''விஞ்ச்''

204 வினு—திருமதி வி. ப. பழனியம்மாள் : மாண்புமிகு அற நிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப் பாரா :

பழனி தேவஸ்தானத்தில் அமைத்துள்ள ''விஞ்ச்'' பிரயாணிகளுக்குப் போதவில்லையாதலால் இன்னொரு விஞ்ச் ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இல்லை.

Tamil Nadu Electricity Board

* 205 *Q*.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Electricity be pleased to state whether Tamil Nadu Electricity Board has entered into contracts with some black-listed firms in Mysore State?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : சென்னையிலுள்ள நிறுவனம் ஒன்றுடன் 1966-ம் ஆண்டு, ஜூலை, அக்டோபர் திங்களிலே ''மின் கடத்திகள்'' வழங்குவதற்கென தமிழ்நாடு மின்சார வாரியம் ஒப்பந்தம் செய்துகொண்டது. இந்த நிறுவனம் மைசூர் மின்சார வாரியத்தால் 1966-ம் ஆண்டு டிசம்பர் முதல் 1967-ம் ஆண்டு எப்ரல் 29-ம் நாள் வரை ''கரும்பட்டியலில்'' சேர்க்கப்பட்ட ஆணை 1967-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 10-ம் தேதியன்று தான் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கிடைத்தது. 1967-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 10-ம் தேதி முதல் 1967-ம் ஆண்டு எப்ரல் மாதம் 29-ம் தேதி அன்று ''கரும் பட்டியல்'' ஆணை நீக்கப்பட்ட வரையில் பொருள்கள் வழங்கும்படி அந்த நிறுவனத்திற்கு ஆணையெதுவும் அனுப்பப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்—விடைகள் முடி வுற்றன.

[**குறிப்பு.**—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. தன்னிலை விளக்கம்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் கேட்ட துணை வினுவிற்கு விடையளிக் கையில் உறுப்பினரைப்பற்றி அமைச்சர் குறிப்பிட்டது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தன்னிலை விளக்கம் ஒன்று அளிக்க விரும்புகிறேன். நாகப்பட்டணத்தில் அரிசி சம்பந்தமாக நான் கேள்வி கேட்கும்போது அமைச்சர் அவர்கள், நான் தவருகப் புரிந்து கொண்டதாகச் சொன்னுர்கள். வாஸ்தவத்தில் தஞ்சை மாவட்டம் ஒரு உபரி மாவட்டம் என்றுலும் அங்கு உபரியில்லாத பல இடங் களும் இருக்கின்றன. அங்குள்ள நிர்வாகக் கோளாறு காரணமாக உண்மையாக நாகப்பட்டணம் போன்ற இடங்களிலும் இன்னும் பல இடங்களிலும் பல சந்தர்ப்பங்களில் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டிருக் கிறது. அப்படி ஒரு நிலை ஏற்படாத நிலையைப் பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என்று சொன்னேனே தவிர தஞ்சை மாவட்டம் ஒட்டுமொத்தமாக உபரி மாவட்டம் அல்ல என்று கருதிச் சொல்லவில்லை.

(முற் பகல் 10-00)

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நாகப்பட்டணம் கோடவுன், நாகப்பட்டணம் மக்களுக்கு அரிசி வழங்கவேண்டுமென்பதற்காக அது தேக்கி வைக்கப்படுகிற இடமல்ல. அங்கு சேகரித்து வைத்து மற்றப் பகுதிகளுக்கு அனுப்பிவைக்க கட்டப்பட்ட இடம் என்று சொன்னுர்கள். அங்குள்ள தேவையைப் பூர்த்தி செய்வதற்குக் கட்டப்பட்ட கட்டடம் அல்ல என்று சொன்னுர்கள். நீங்கள் விவரம் தெரியாமல் கேட்பதாகச் சொல்லவில்லை. ஆகவே நீங்கள் தவருக எடுத்துக்கொள்ளவேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் நமது சட்டமன்ற விதி 82-ன் கீழ் ஓர் அறிக்கையைப் பேரவைக்கு அளிப்பார்கள்.

2. நடைமுறைக் கேள்விகள்.

(ஆ) அவையுரிமைக் கேள்வியைப் பிற அலுவல்களுக்கு முன் எடுத்துக் கொள்ளல்.

THIRU K. VINAYAKAM : On a point of order Sir, the hon. Member Mr. Ramamoorthy has given notice of a privilege motion. Our rules are very clear on the issue. Rule 186 says that a matter of privilege gets precedence over all other business and should be raised immediately after question time. So please allow the privilege motion to be moved before any other business is taken up.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராமமூர்த்தி அவர்கள் ப்ரிவிலேஜ் மோஷன் கொடுத்திருப்பது பேரவைத் தலைவரிடத்தில் இருக்கும். அதைக் கொடுத்தவர் கேட்பது என்றால், ஒரு முறை இருக்கிறது. என்னிடத்தில் அப்படி ஏதாவது கொடுத்திருந்தால் அதை நான் அறிவிக்கிற வரையில் அந்தச் செய்தி மற்ற உறுப்பினர்களுக்குப் போவது என்பது முறையல்ல. அதை வைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புவது முறையல்ல. அமைச்சர்கள் எந்த நேரத்திலும் அறிக்கை கொடுக்க நம் விதிமுறைகள் இடம் அளிக்கின்றன. அதாவது

A statement may be made by a Minister on a matter of public importance with the consent of the Speaker.

There shall be no debate on such statement at the time it is made.

இந்த ஸ்டேட்மெண்ட் வருவது இந்த ப்ரிவிலேஜ் மோஷனை ஆய்வு செய்வதற்குத் துணையாக இருக்கும். அமைச்சர் அவர்கள் ஸ்டேட்மெண்ட் கொடுத்த பிறகு நான் அதை எடுத்துக்கொள்கிறேன். ப்ரிவிலேஜ் மோஷன் கொடுத்தவுடன் அதை அன்றே எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதல்ல, நாளைக்குக் கூட எடுத்துக்கொள்ளலாம். கொடுத்த அன்றே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று விதிமுறைகளில் இடம் இல்லை. பேரவைத் தலைவர் விரும்பினால் எடுத்துக்கொள்ளலாம். ஆகவே, அமைச்சர் அவர்கள் ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுப்பது என்பது முறைதானா என்பது ஒரு ஒழுங்குப் பிரச்சினை அல்ல.

திரு. க. இராமமூர்த்தி : நான் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் மீது ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறேன். நான் அதைத் தங்களிடம் கொடுத்தபோது கூட்டுறவு அமைச்சர் அவர்கள் தங்களிடம் தொடர்பு கொள்ளவில்லை என்பதும் இது போன்ற ஒரு அறிக்கையை இந்த அவையில் வெளியிட இருக்கிறார்கள் என்பதும் தெரிவிக்கப்படவில்லை. அவர்களிடம் தாங்கள் தெரிவிக்கவில்லை என்பதை தங்களிடம் பேசியதிலிருந்து அறிய வந்தேன். உரிமைப் பிரச்சினையைக் கொடுத்த பிறகு அதை அறிந்துகொண்டு . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தவறான செய்தியை உறுப்பினர் அவர்கள் மீண்டும் அவைக்குக் கொடுக்கிறார்கள். திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினை பற்றி பேரவைத் தலைவரிடம் கொடுத்திருக்கிறார்கள். அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்து அதனால் இப்படி ஒரு அறிக்கை கொடுக்கிறார்கள் என்றால் அப்படி நோக்கம் கற்பிப்பது முறையாகாது. அது பேரவைத் தலைவரையே குற்றஞ் சாட்டுவதாகும். அப்படிச் சொல்வது என்னிடம் கொடுக்கப்பட்டதை நானே அவர்களுக்குக் கொடுத்ததாக ஒரு குற்றச்சாட்டு